**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**OS No. 124/2016** **தேதி: 20.08.2025**

**பி.வா.சா.1 – சுப்புலட்சுமி**

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு முதல் விசாரணை–</u>**

எனது கூடுதல் சாட்சியத்தை எழுத்துமூலமாக நிரூபண வாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளவாறு விடுதலை பத்திரம் அசல் வா.சா.ஆ.20, காலம் சென்ற 1ம் வாதியான மருதாயி காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்த எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் அசல் வா.சா.ஆ.21 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.